# நல்ல போராட்டம்

Transcribed from a message spoken in February, 2014 in Chennai

By *R.S.Milton*

*"எங்களுடைய பேராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைபடுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2 கொரி. 10:4, 5).*

*"எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும், சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" (எபே. 6:18).*

### கடினமான பாதை

தேவனுடைய மக்களின் வாழ்க்கையைப் பார்க்கும்போது நமக்குப் பல எண்ணங்களும், உணர்ச்சிகளும் எழுகின்றன. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு எழுகின்ற தடைகளும், எதிர்ப்புகளும், சோதனைகளும், பரீட்சைகளும், போராட்டங்களும் எண்ணிலடங்கா. உண்மையிலேயே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரைப் பின்பற்றுவது ஒரு கடினமான பாதைதான். ஒருவன் இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்துவைப்போல் வாழ்வதையும், அவருடைய வழிகளில் நடப்பதையும் தெரிந்துகொண்டால் அவன் பாடுபடவேண்டியிருக்கும். *"நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைய வேண்டும்" (அப். 14:22)* என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடப்பது என்பது கடினமான ஒரு பாதை. "இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் உனக்குத் தோல்வியில்லை. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் நீ பணக்காரனாகி விடுவாய். அவரை விசுவாசித்தால் அவர் உனக்கு மாடி வீடு தருவார். நீ விசுவாசித்துப் பார். இப்படி இதுவரை நடக்கவில்லையென்றால் உனக்கு விசுவாசிக்கத் தெரியவில்லை அல்லது உனக்கு கேட்கத் தெரியவில்லை என்று பொருள்," என்பதுபோன்ற பிரசங்கங்களை நாம் கேட்கிறோம். இந்த உலகத்தில், நேர்மறையாகச் சிந்திக்கும்போது ஏற்படும் வல்லமையைக்குறித்துப் பேசுகிற குருக்களும், தேவனுடைய மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவைகளையெல்லாம் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் நமக்கு எழும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, *"உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து," (லூக்கா 22:32)* என்று பேதுருவிடம் சொன்னதுபோல் நம் விசுவாசத்தைப் பலப்படுத்துவாராக, உறுதிப்படுத்துவாராக. *"தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்" (மத். 26:11)* என்றும், *"உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய சகோதரர்கள்" (உபா. 15:11)* இருப்பார்கள் என்றும் வேதம் சொல்லுகிறது. பலவீனமுள்ள சகோதரர்கள் நம்மிடையே எப்போதும் இருப்பார்கள். *"விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள். ஆனாலும், அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்கலாகாது" (ரோமர் 14:1).* அவர்களுடைய பலவீனங்களை நாம் நியாயந்தீர்க்கமுடியாது. ஆனால், அவர்கள் போராட்டத்துக்குத் தப்ப முடியாது.

தேவனுடைய மக்களுக்கு சோதனை, பரீட்சை, போர், போராட்டம் உண்டு. ஆனால், "தேவனுடைய மக்கள் நிறையப்பேருக்கு இப்படிப்பட்ட பரீட்சையும், சோதனையும், போராட்டமும், போரும் இல்லையே! இவைகள் இல்லாமல் அவர்கள் வாழ்கிறார்களே!" என்று ஒருவன் சொன்னால், அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதுதான் பதில். *"அவர்கள் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலி. 2:18, 19).* அவர் தேவனுடைய மக்களைப்பற்றிச் சொல்லுகிறார். இலச்சை என்றால் வெட்கம். இன்றைக்கு அவர்கள் மகிமை என்று நினைப்பதை ஒருநாளிலே வெட்கம் என்று அவர்கள் கணிப்பார்கள். அவர்களுடைய கண்களால் அவர்கள் காண்பார்கள் என்று பவுல் கூறுகிறார்.

## போராட்டம் இயல்பானது

தேவனுடைய மக்களுக்குப் போர் உண்டு. ஒரு போர், ஒரு போராட்டம், ஒரு சோதனை, ஒரு பரீட்சைவழியாக நாம் போகும்போது, "இது ஏதோ விந்தையானது!" என்று நாம் நினைக்கக்கூடாது. இது தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் இருக்கிற இயல்பான வாழ்க்கை. அப்படிப்பட்ட போரும், போராட்டமும், பரீட்சையும், சோதனையும் ஒருவனுடைய வாழ்க்கையில் இல்லையென்றால் "அவர்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையின் பகைஞனுடைய கலாசாரத்தையும், பண்பாட்டையும், வழியையும், கோட்பாட்டையும், பிரமாணத்தையும் பற்றிக்கொண்டு வாழ்கிறார்கள்," என்று உறுதியாகச் சொல்ல முடியும். "ஓ! உங்களுக்குத் துன்பம் இருக்கிறது என்பதற்காக துன்பம் இல்லாதவர்களெல்லாம் சிலுவைக்குப் பகைஞர்களா?" என்று கேட்டால் முழுப் புதிய ஏற்பாட்டையும் நீங்கள் வாசித்துப் பாருங்கள். மனித குமாரனுக்கு ஒரு நல்ல அடைமொழி உண்டு. "அவர் துக்கம் நிறைந்தவர், பாடநுபவித்தவர். ஆனாலும், அவரைப்போல் இந்த உலகத்தில் சமாதானமாக ஒரு மனிதனும் வாழவில்லை." என்பதுதான் இதன் பொருள். அதுபோல, இந்தப் பூமியில் நாம் துக்கம் நிறைந்தவர்களும், பாடு அநுபவிக்கிறவர்களுமாக வாழ்ந்தபோதும், இந்தப் பூமியில் தேவனுடைய மக்களாகிய நம்மைப்போல் வேறு யாரும் சமாதானத்தை அநுபவிக்க முடியாது. "அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது. அவன் வேலைகள் வருத்தமுள்ளது. இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதல் இல்லை." *(பிரசங்கி 2:23)* என்று உலக மக்களைப்பற்றி சாலொமோன் சொல்லுகிறான்.

தேவனுடைய மக்களுக்குப் போராட்டம் உண்டு. இந்தப் போராட்டத்தின் தன்மை, குணம் என்னவென்றால், எங்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவருக்குரிய தலையாய, முதன்மையான, மேன்மையான இடத்தைப் பெறுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறாரோ அங்கு தேவனுடைய பகைவனாகிய சாத்தான் அதை எதிர்ப்பான். எனக்கு அல்லது என் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல்நலம் சரியில்லை என்பதையோ அல்லது எனக்கு நல்ல வேலை இல்லை அல்லது வேலை இருந்தாலும் போதுமான வருமானம் இல்லை, போக்குவரத்துக்கு நல்ல வண்டி இல்லை, நண்பர்களும் உறவினர்களும் எனக்கு அதிகம் இல்லை என்பதல்ல போராட்டம்.

சிலுவையின் வழியில் நாம் நடக்காதவரை நமக்கு உறவினர்களும், நண்பர்களும் நிறையப்பேர் இருப்பார்கள். நாம் சிலுவையின் வழியைத் தெரிந்து கொள்ளும்போது திரும்பிப் பார்த்தால் நம்மோடுகூட வந்த நண்பர்களும், உறவினர்களும் அங்கு இருக்கமாட்டார்கள். என்ன நேர்ந்தாலும் நம்மைக் கைவிடமாட்டேன் என்றும், நம்மோடு என்றென்றைக்கும் இருப்பேன் என்றும், சாகிறவரை நண்பர்களாக இருப்போம் என்றும் சொன்னவர்களெல்லாம் இப்போது அங்கு இருக்கமாட்டார்கள்.

தேவனுடைய மக்களுக்குப் போர் உண்டு. "இப்படியிருக்க கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்" *(1 பேதுரு 4:1)* என்று பேதுரு கூறுகிறார். "எங்களுக்குப் போராட்டமா? இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் நோய் போய்விடும், சாபம் போய்விடும், சுகம் கிடைக்கும், நல்ல படிப்பு, வேலை, வருமானம், வாழ்க்கைத்துணை ஆகியவைகளைத் தருவார் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே!" என்று யாராவது சொன்னால், இவைகளெல்லாம் பொய்காரர்களுடைய பேச்சு. தேவன் இவைகளைத் தரவேமாட்டார் என்று நான் சொல்லவில்லை. அவர் தம் பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டிய ஈவுகளை அறிந்திருக்கிறார். ஆனால் இவைகளல்ல நம் இலக்கு.

## கிறிஸ்துவைச் சுதந்தரித்தல்

தேவனுடைய மக்கள் நல்ல தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் போரிட வேண்டும் என்பதற்கு யோசுவாவின் புத்தகம் சாட்சி. அதுதான் யோசுவாவின் புத்தகத்தின் கருப்பொருள். தேவனுடைய நித்திய திட்டத்திலே பௌதீகமான, பருப்பொருளான ஒன்றைப்பற்றி அவர் அக்கறைப்படவில்லை. தேவனுடைய மக்களுக்கு இந்தப் பூமியில் ஒரு நல்ல தேசம் இருக்க வேண்டும் என்பது அவர் நோக்கம் அல்ல. பூமிக்குரிய இஸ்ரயேல் தேவனுடைய நோக்கம் அல்ல. பரம எருசலேம்தான், பரம இஸ்ரயேல்தான் தேவனுடைய நோக்கம். ஆகவே, நல்ல தேசம் என்பது இந்தப் பூமியில் இருக்கும் ஒரு நாடு அல்ல. நல்ல தேசம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கின்ற ஓர் அடையாளம். அது அவரைக் குறிக்கிற ஒரு பழைய ஏற்பாட்டுச் சித்திரம். தேவனுடைய மக்கள் கிறிஸ்துவைச் சுதந்தரிக்க வேண்டும். கிறிஸ்துவை அறிய வேண்டும். கிறிஸ்துவால் வாழ வேண்டும். கிறிஸ்து அவர்களுக்குள் உருவாக்கப்பட வேண்டும். கிறிஸ்து அவர்கள்மூலம் வெளியாக்கப்பட வேண்டும் என்பது அவருடைய நித்தியத் திட்டம்.

இது ஒரு போர்க்களம். எங்கு ஒரு தனிப்பட்ட மனிதனோ அல்லது ஒரு கூட்டம் மக்களோ இந்தக் கிறிஸ்துவைச் சுதந்தரிக்க வேண்டும் என்பதற்காகப் பிரயாசப்படுகிறார்களோ அப்போது அது ஒரு போர்க்களமாக மாறிவிடும். நாம் ஒவ்வொருநாளும் கிறிஸ்துவைச் சுதந்தரித்துக்கொண்டிருக்கிறோம். எல்லாச் சம்பவங்கள்மூலமாக, நிகழ்ச்சிகள்மூலமாக, சூழல்கள்மூலமாக, நிலைமைகள்மூலமாக ஒன்றேவொன்றுதான் எல்லா நேரமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவைச் சுதந்தரித்துக் கொள்கிற அல்லது பவுல் சொல்வதுபோல் கிறிஸ்துவை ஆதாயம் பண்ணிக்கொள்கிற ஒரேவொரு காரியம்தான் நம் வாழ்நாள் முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது (பிலி. *3:9*).

இந்தப் பூமியில் நாம் ஒரு நல்ல கல்வியை, நல்ல வேலையை, நல்ல வருவாயை, நல்ல வாழ்க் கைத்துணையை, நல்ல வீட்டை, நல்ல வாகனத்தை, நல்ல வாய்ப்பு வசதிகளை அடைவதற்காக, சுதந்தரிப்பதற்காக நாம் எப்படி ஆசையாய்த் தேடுகிறோமோ, அதுபோல "நான் இந்தக் கிறிஸ்து வைச் சுதந்தரிப்பதற்காக, ஆதாயம்பண்ணுவதற்காக, ஆசையாய்ப் பின்தொடர்கிறேன்," என்று பவுல் கூறுகிறார். அந்த அளவுக்குக் கிறிஸ்து அருமையானவராக, விலையேறப்பெற்றவராக, மேன்மை யானவராக, மதிப்புள்ளவராகத் தோன்றவில்லையென்றால், "ஆண்டவரே, நீர் எவ்வளவு அருமை யானவர், மேன்மையானவர், விலையேறப்பெற்றவர், மதிப்புள்ளவர் என்று காண என் கண்களைத் திறந்தருளும்," என்று நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும்.

ஏனென்றால், இதுவரை நாம் எவைகளையெல்லாம் அருமையானவைகள், மேன்மையானவைகள், விலையேறப்பெற்றவைகள், மதிப்புள்ளவைகள் என்று கருதி ஆசையாய்ப் பின்பற்றினோமோ அவை களெல்லாம் நாம் நம் வாழ்க்கையின் முடிவுக்கு வரும்போது, வெறுமையும் மாயையுமானவை என்ற உணர்வு நம்மைக் கவ்விக்கொள்ளும். இப்போதைக்கு வருத்தமும், சஞ்சலமும் இருக்காது. ஆனால், அப்போது வருத்தமும், சஞ்சலமுமாயிருக்கும். இன்றைக்கு நம்மைச் சுற்றியிருக்கிற எல்லாரும் எதைச் செய்துகொண்டிருக்கிறார்களோ அதையே நாமும் செய்தால் நமக்கு எந்த வித்தியாசமும் தெரியாது. இதுதான் உலகம்.

கிறிஸ்துவை அறிவதற்குப் போராட்டம் உண்டு. ஒரு சூழ்நிலையில் கிறிஸ்துவால் வாழ்வதற்குப் போராட்டம் உண்டு. சூழ்நிலையின் தீவிரம் மிக அதிகமாக இருக்கும்போது, "இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்துவால் வாழ முடியாது", என்று நம் இருதயத்திலே வருத்தமும், சஞ்சலமும், நம் வாய் களிலே புலம்பல்களும், முறுமுறுப்புகளும் ஏற்படும். இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்துவால் வாழ முடி யாது என்பதுபோல் வருகிற சூழ்நிலைதான் போர். இயேசுகிறிஸ்துவை சுதந்தரிக்க வேண்டும் என்று தீர்மானித்து, ஆசையாய்ப் பின்தொடர்கிற எந்தத் தனிப்பட்ட மனிதனும், தேவனுடைய மக்களாலான கூட்டுச் சமுதாயமும் போர்க்களத்தில் இருக்கிறது என்று பொருள். நம் பிள்ளைகளுக்கு நாம் கிறிஸ் துவை வைத்துவிட்டுப் போக வேண்டும். கிறிஸ்துவை வைத்துவிட்டுப் போக முடியும். அவர்களுக்கு ஒரு காணி நிலம் வைத்துவிட்டு போகவில்லை என்பதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம். நாம் சோம்பேறிகளாக இருக்க வேண்டும் என்பதல்ல அதன் பொருள். அப்படியல்ல. ஆனால் கிறிஸ் துவை வைத்துவிட்டுப் போகவில்லை என்பதைப்பற்றி நாம் அக்கறைப்பட வேண்டும். இது முதலா வது காரியம். நம் இலக்கு கிறிஸ்துவைச் சுதந்தரிப்பது, ஆதாயம் பண்ணிக்கொள்வது.

## போராட்டம் உண்டு

இரண்டாவது, இந்த இலக்கை எட்டுவதற்குப் போர் உண்டு. எதிர்ப்பும், போராட்டமும் உண்டு. பல் வேறுவிதமான எதிர்ப்புகள் உண்டு. உலகத்திலிருந்து வரும், இந்தப் பூமியிலிருந்து வரும், நம் மாம்சத்திலிருந்து வரும், மனிதர்களிடமிருந்து வரும். சந்திக்கின்ற எதிர்ப்புகளையெல்லாம் நீங்கள் விநோதமாகக் கருத வேண்டாம். "ஏனெனில் நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" *(2 தீமோ. 4:6, 7)*. இது கல்லறையில் எழுதப்படவேண்டிய வசனம் என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி கல்லறையில் எழுதுபவர்களிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். "எப்படி நல்ல போராட்டத்தை போராடினாய்? உண்மை யிலேயே இந்தப் போராட்டங்களில் நான் கிறிஸ்துவால் வாழ்ந்தேன். கிறிஸ்து எனக்குள் உருவாக் கப்பட்டார். கிறிஸ்து என்மூலம் வெளியாக்கப்பட்டார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தர முடியுமா?" நம் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் அப்படிப்பட்ட எடுத்துக்காட்டுகளால் நிறைந்ததாக இருக்க வேண் டும். ஆகவே, கிறிஸ்துவால் வாழ்வது போரில்லாமல் நடக்காது. நாமெல்லாரும் வெவ்வேறு வித மான சூழ்நிலையில் இருக்கிறோம். கிறிஸ்துவால் வாழ முடியும் என்பதை நாம் விசுவாசிப்போம். அந்தச் சமயத்தில் அது போர்க்களமாக மாறிவிடும். போர்க்களம் என்பது தேவனுடைய பகைவ

னாகிய சாத்தான் நம் இருதயத்தில் அப்படிப்பட்ட எண்ணங்களை தீவிரமாக விதைப்பான். "இந்தச் சூழ்நிலையில் நீ கிறிஸ்துவால் வாழ முடியாது. அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்திருக்க முடியும். ஆனால், இந்தச் சூழ்நிலையில் வாழ முடியாது," என்பதை அவன் நிரூபிப்பான். போராட்டம் செய் வதற்கு பிசாசு கத்தியோடு வரமாட்டான். நாம் அவனுடைய தந்திரங்களை அறியாதவர்கள் அல் லவே. அவன் ஓர் எண்ணத்தை நம் மனதிலே விதைப்பான். அந்த எண்ணம் அலைபோல் மோதிக் கொண்டேயிருக்கும்.

எனவே, முதலாவது, நம் இலக்கு கிறிஸ்துவைச் சுதந்தரிப்பது. இரண்டாவது, அந்த இலக்கை நோக்கி நாம் ஆசையாய்ப் பின்தொடரும்போது நமக்குப் போர் உண்டு.

## ஆவிக்குரிய மண்டலத்தில் போராட்டம்

மூன்றாவது, எல்லாப் போராட்டங்களுக்கும் ஒரு காரணகர்த்தா உண்டு. அது சாத்தான். நம் போராட் டம் இந்த மாம்சத்துக்குரியதல்ல. "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே. *6:12*). நம் எல்லாப் போராட்டங்களும் ஆவிக்குரிய மண்டலத்தில்தான் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால், நம் நிறைய போராட்டங்கள் இந்தப் பூமிக்குரிய தளத்தில் இல்லை. அவை ஆவிக்குரிய தளத்தில் இருக்கின்றன.

தானியேல் புத்தகத்தில் ஓர் எடுத்துக்காட்டு இருக்கிறது. தானியேல் ஒரு காரியத்துக்காக உப வாசித்து ஜெபிக்கிறார். இருபத்தோராவது நாள் அவருக்குப் பதில் கிடைத்தது. ஒரு தூதன் அவ ரைச் சந்திக்கிறான். அந்தத் தூதன், "உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்து கிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது. உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன். பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி (வான மண்டலத் திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனை) இருபத்தோரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். நான் போனபின்பு கிரேக்க தேசத்தின் அதிபதி வருவான்" (தானி. *11:13*). அதாவது தானியேல் ஜெபிக்கத் தொடங்கின அன்றே அவனுடைய ஜெபத்துக்குப் பதில் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பதில் அவனைச் சென்றடையாதபடிக்கு சாத்தான் எதிர்த்து நின்றான். எனவே, ஆவிக்குரிய தளத்தில் நமக்குப் போராட்டம் உண்டு.

நம் போராட்டம் ஒரு விக்கிரகமோ, பெற்றோரோ, உடன்பிறந்தவர்களோ அல்ல. அவர்கள் கைப் பாவைகள். அவர்களுக்குப்பின்னால் ஆவிக்குரிய தளத்தில் இதுபோன்ற ஆட்சியாளர்கள், அதிகாரங்கள், தீயசக்திகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

## நம் போராயுதங்கள்

நான்காவது, இந்தப் போராட்டத்தில் நாம் எப்படிப் போராடுவது? "போதும் கர்த்தாவே, என் ஆத்து மாவை எடுத்துக்கொள்ளும். நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல," *(1 இரா. 19:4)* என்று ஒரு பெரிய தீர்க்கதரிசி ஜெபித்தான். நம் ஓட்டத்தை நாம் இப்படி முடித்துக்கொள்ளலாமா? நம் மனப்பாங்கு எப்படி இருக்க வேண்டும் என்றால், "ஆண்டவரே இந்தச் சூழ்நிலை கடினமாக இருக்கிறது. என்னால் தாங்க முடியவில்லை. ஆனால் இந்தச் சூழ்நிலையில் நீர் யார் என்பதையும், எப்படிப்பட்டவர் என்பதையும் நாம் காண விரும்புகிறேன்," என்பதாக இருக்க வேண்டும். "எந்தக் கிறிஸ்துவால் நான் வாழ வேண்டும், எந்தக் கிறிஸ்து எனக்குள் உருவாக்கப்பட வேண்டும் என்று நீர் சித்தங்கொண்டிருக்கிறீரோ அந்தக் கிறிஸ்துவை நான் தவறவிட விரும்பவில்லை," என்பதுதான் நம் மனப்பாங்காக இருக்க வேண்டும்.

நம் வாழ்க்கை இன்றைக்கோ நாளைக்கோ முடிவடைவதைப்பற்றி பெரிதாக வருத்தப்பட வேண்டம். ஆனால், நம் வாழ்க்கை "ஓட்டத்தை முடித்தேன்" என்ற நிச்சயத்தோடு முடிய வேண்டும். "கிறிஸ் துவை நானும் ஆதாயம்பண்ணிக்கொண்டேன். மற்றவர்களும் ஆதாயம்பண்ணிக்கொள்ள உதவிசெய் தேன்," என்பதோடு நம் வாழ்க்கையின் ஓட்டத்தை முடிக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னதுபோல, "பிதாவே நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்து போக வில்லை," *(யோவான்18:9)* என்பது நம் சாட்சியாக இருக்க வேண்டும். "தேவன் எந்தெந்த மக்களுக் குக் கிறிஸ்துவை வழங்க வேண்டும், பரிமாற வேண்டும், ஊட்ட வேண்டும், புகட்ட வேண்டும் என்று எனக்கு பொறுப்பைக் கொடுத்தாரோ, அந்தப் பொறுப்பில் நான் தவறவில்லை. என் இலக்கை, என் பணியை, என் ஓட்டத்தை நான் முடித்தேன்," என்கிற உறுதியோடு நாம் தேவனிடத்தில் கடந்துபோக

வேண்டும். இது இருநூறுபேராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இது இரண்டு பேரா கக்கூட இருக்கலாம். இது உங்களுடைய பிள்ளைகளாகக்கூட இருக்கலாம். அவர்களுக்கு நான் கிறிஸ்துவைக் காண்பித்திருக்கிறேன். ஏனென்றால் நாம் வாழ்கிற தலைமுறையைவிட அடுத்த தலை முறை சந்திக்கப்போகிற போராட்டம் மிக அதிகமாக இருக்கும். அவர்களைத் தனிமைப்படுத்தி விடுவார்கள். தேவனுக்கு உண்மையாக நடக்கிற மக்கள் அடுத்த தலைமுறையில் இன்னும் அதிக மாகத் தனிமைப்படுத்தப்படுவார்கள். நாம் விட்டுப்போகிற கிறிஸ்து உண்மையாகவே ஜீவனுள்ள, உயிர்த்துடிப்புள்ள, வீரியமுள்ள கிறிஸ்துவாக இருந்தால் இன்னொரு தலைமுறை அந்தக் கிறிஸ்து வால் வாழும். அல்லது அவர்கள், “என் பெற்றோர்கள், என் ஐக்கியத்திலுள்ள தேவனுடைய பரிசுத்த வான்கள் அவர்கள் கிறிஸ்தவர்கள்தான். கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது. ஆனால், அவர்கள் வாழ்ந்த கிறிஸ்துவை நாங்கள் இந்தத் தலைமுறையில், இந்த நாட்டில், இந்த ஊரில் வாழ முடி யாது” என்கிற ஓர் எண்ணத்திற்கு வருவார்கள்.

இந்தப் போரில் தேவனுடைய மக்களாகிய நமக்குப் போராயுதம் இருக்கிறதா அல்லது நாம் தோற்று விடுமோமா? “நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்க ளல்ல” என்று பவுல் கூறுகிறார் (2 கொரி 10:3) மாம்சத்தில் ஒரு போர் வருகிறபோது நாம் அதை மாம்சத்திற்குரிய ஆயுதத்தைவைத்து எதிர்கொள்ள முடியாது. உலகத்திலிருந்து ஒரு போர் வரும் போது அதை உலகத்தின் வழிகளில் எதிர்கொள்ள முடியாது. உலகமக்கள் நம் வீட்டருகே அதிக சத்தத்தோடு ஒலிபெருக்கியில் பாட்டு பாடுகிறார்கள் என்பதற்காக நாமும் சத்தத்தை அதிகமாக வைத்துப் பாட்டுப்பாடலாமா? அவர்கள் பத்துபேரைக் கூப்பிட்டு இப்படிச் செய்தால் நாமும் நூறு பேரைக் கூப்பிட்டு இப்படிச் செய்யலாமா? அவர்கள் ஒரு முக்கியமான நபரைக் கூப்பிட்டு கூட்டம் நடத்தினார்கள் என்பதற்காக நாமும் உயர்பதவியில் இருக்கும் வேறு ஒருவரைக் கூப்பிட்டுக் கூட்டம் நடத்தலாமா? நமக்கு உதவி வேண்டும் என்பதற்காக ஒரு அமைச்சரை நாடிப் போகலாமா? நம் போராயுதங்கள் மாம்சத்துக்குரியவைகள் அல்ல.

நெகேமியா, தானியேல்போன்ற தேவனுடைய மக்கள் அரசருடைய ஆதரவைப் பெற்றிருந்தார்கள், பெரிய அதிகாரிகளுடனும், ஆட்சியாளர்களோடும், அரசியல் தலைவர்களோடும் பழகினார்கள். ஆனால் அதிகாரிகள், அரசர்களுடைய உபகாரத்தை, தயவை, அவர்கள் நாடித் தேடி ஓடிப் போக வில்லை. அவர்களுடைய தயவு இல்லையென்றால் தேவனுடைய பணி இந்த யுகத்தில் நடை பெறாது என்று அவர்கள் நினைக்கவில்லை. தானியேல், “ராஜாவே, நீர் என்றும் வாழ்க” என்று மிக மரியாதையோடு நேபுகாத்நேச்சரோடு பேசுகிறார். ஆனால் தானியேலின் நண்பர்கள் “நேபுகாத் நேச்சரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியம் இல்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை. நீர் நிறுத்தின பொற் சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது,” என்று அவனைப் பெயரிட்டுக் கூப்பிட்டுச் சொன்னார்கள் (தானி. 3:16-18) எனவே எப்போதும், “ராஜாவே, நீர் வாழ்க” என்று சொல்லத் தேவையில்லை.

நம் போராயுதம் என்ன? தேவனுடைய மக்கள் இந்த ஆவிக்குரிய மண்டலத்திலுள்ள சக்தியோடு போராடும்போது அவைகளை மேற்கொள்வதற்குரிய சக்தியோ, பலமோ, வளமோ நம்மிடத்தில் இல்லை. அவன் ஓர் எண்ணத்தை நம் மனதில் புகுத்தித் தாக்கும்போது அந்த எண்ணத்தை எந்த மருந்து கொடுத்தாலும் நம் மனதைவிட்டு எடுக்க முடியாது. அது நம்மைத் தைத்துக்கொண்ட முள் போல நம் இருதயத்தில் இருக்கும். ஏனென்றால், நம் போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல. இவைகள் ஆவிக்குரிய தளத்தில் இருக்கிற ஆவிக்குரிய சக்திகளாக இருப்பதால் நம் ஆயுதங்கள் மாம்சத்துக்குரியவைகளாக இருக்கக்கூடாது. அப்படியானால் நம் ஆயுதங்கள் எங்கிருக் கின்றன? நம் ஞானம், பலம், வளங்களெல்லாம் பரம தளத்தில் கிறிஸ்துவுக்குள் உள்ளன. நம் வளங்களும், ஆயுதங்களும் உள்ளன. வளங்கள் என்ற வார்த்தை நமக்குத் தெரியும். ஆனால் நம் ஆயுதங்களும் கிறிஸ்துவுக்குள்தான் இருக்கின்றன. இதை நாம் எப்படிப் பெறுவது? அதே எபேசியர் 6ஆம் அதிகாரத்தில் “தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லி விட்டு “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்,” (எபே. 6:18) என்றும் பவுல் சொல்லுகிறார்.

## ஜெபமாகிய போராயுதம்

ஜெபம் என்றால் என்னவென்று நாம் நினைக்கிறோம் என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஒரு மனிதன் தன் இருதயத்தைத் தேவனுக்கு நேராகத் திருப்பி, தன் முழங்கால்களை மடக்கி, தன் வாய்களைத் திறந்து, தனக்காகவும், தேவனுடைய மக்களுக்காகவும், வேறு எந்த மனிதனுக்காகவும் ஜெபிக்கும்போது அவன் தேவனை, தேவனுடைய வளங்களை, தேவனுடைய ஆயுதங்களை அந்த மனிதனுக்குள் கொண்டுவருகிறான். மனிதனுடைய மனதில் கோடிக்கணக்கான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கும். "இந்த மனிதனைத் தொடவே முடியாது" என்று நாம் நினைப்போம். ஒரு எண் ணத்தை மனிதனுடைய மனதுக்குள் செலுத்துவதற்கு நம்மிடம் பலம் இல்லை. இப்படிப்பட்ட சூழ் நிலைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் அவர்களுடைய எண்ணங்களிலேயே சுற்றிக்கொண் டிருப்பார்கள். அவர்கள் எங்கெங்கோ சுற்றிக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். அப்படியல்ல. ஒருவ னிடம் பேசிப்பாருங்கள். அரைமணி நேரம் பேசினபிறகும் எங்கு ஆரம்பித்தானோ அங்குதான் மீண் டும் வந்து நிற்பான். அவனுடைய இருளான எண்ணச் சூழ்நிலையிலிருந்து அவனால் விடுதலை பெற முடியாது. அவனை அதிலிருந்து வெளியே கொண்டு வர முடியாது. அது எப்படிப்பட்ட எண்ணமாகவும் இருக்கலாம்.

அவர்களுடைய உணர்ச்சிகள் கொந்தளிக்கும். பெரிய தீர்க்கதரிசியாகிய எலியாவையே அந்த உணர்ச் சிகள் தாக்குகிறது என்றால் மற்ற சாமானியர்கள் எம்மாத்திரம்! எவ்வளவு பெரிய தீர்க்கதரிசி! 450 பாகால் தீர்க்கதரிசிகளைத் தன்னந்தனியாக நேருக்குநேர் சந்திக்கும் அளவுக்குப் பலம் வாய்ந்தவன். "யெஹோவாவே தேவன்" என்று இஸ்ரயேல் மக்களைக் கூக்குரலிடச்செய்த பெரிய தீர்க்கதரிசி. அவனுடைய உணர்ச்சிகள் எப்படி ஆட்டிப்படைக்கின்றன!. "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும். நான் என் பிதாக்களைப்பார்க்கிலும் நல்லவன் அல்ல," என்று அவன் தேவ னிடத்தில் சொல்கிறான். ஓர் அரசிக்குப் பயந்து ஓடுகிறான். அப்படியானால் உணர்ச்சிகளின் பலம், தாக்கம், சக்தி எவ்வளவு பெரிது! எனவே, நம் உணர்ச்சிகளைக்குறித்து நாம் மிகவும் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

இவைகளையெல்லாம் மீறி ஒரு மனிதனை வலுப்படுத்த இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? இவைகளையெல்லாம் தாண்டி தேவன் ஒரு மனிதனைத் தொடுவதற்கு என்ன உண்டு? மனிதனுக்கு ஆவி என்று ஒன்று உண்டு. இது பரம்புதிரானது அல்ல. ஒருவனுடைய மனதைச்சுற்றி கோடிக் கணக் கான எண்ணங்கள் காவல்காரர்களைப்போல் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஒரு காவல்காரனைத் தாக் கியவுடன் இன்னொரு காவல்காரன் தற்காக்க வருகிறான். சிலருடன் ஆவிக்குரிய உரையாடல் நடத்துவதுண்டு. அவர்கள் ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஓர் எண் ணத்தை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள முயற்சி செய்யும்போது புரிந்துகொள்வார்கள். அவர் களுடைய மனதுக்குள் ஓர் எண்ணத்தை செலுத்த முடியாதவாறு அந்தக் கோடிக்கணக்கான காவல் காரர்கள் அரணைப்போல் அவனுடைய மனதைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். 2 கொரிந்தியர் 10 ஆம் அதிகாரத்தில் பவுல் அதைச் சொல்லுகிறார். அவர்களுடைய கற்பனைகள், எண்ணங்கள், சிந் தனைகள். பொய்கள் புரட்டுகள் எல்லாம் அவர்களைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கின்றன. இவை களுக்கெல்லாம் அப்பாற்பட்டு தேவன் ஒரு மனிதனைத் தொடுவதற்கென்று அங்கு ஓர் இடம் இருக் கிறது. அது மனிதனுடைய ஆவி. எனவே, நாம் நம்பிக்கை இழந்துபோகக் கூடாது. தேவனால் தொடமுடியாத ஒரு மனிதன் இல்லவே இல்லை. ஆனால், அதற்கென்று உறுதியாக ஜெபிக்கிற மக்கள் தேவனுக்கு வேண்டும்.

"நாம் ஜெபித்தாலும் ஜெபிக்காவிட்டாலும் தேவன் தம் சித்தத்தை நிறைவேற்றிவிடுவார்," என்று நாம் நினைக்கலாம். இந்த எண்ணம் பொய். நாம் ஜெபிக்க வேண்டும். "நாம் ஜெபித்தால் நடை பெற லாம். ஆனால், நாம் ஜெபிக்காவிட்டால் நடைபெறாது என்று சொல்ல முடியாது. தேவன் தம் இரக் கத்தின்படிகூட தம் சித்தத்தை நிறைவேற்றிவிடலாம்," என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். அப் படியல்ல. தேவன் தம் இரக்கத்தின்படி நம் வாழ்க்கையில் நமக்குப் பல நன்மைகளைத் தருகிறார். ஆனால், ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் என்றால் அந்த இலக்கிற்காகத் துல்லியமாக, கூர்மையாக இடைவிடாது, உறுதியாக ஜெபிக்கின்ற மக்கள் தேவனுக்கு வேண்டும்.

தேவனுடைய மக்களின் வாழ்க்கை முடியும்போது, "அவர்கள் தோற்றுப்போனார்கள் அல்லது வென் றார்கள்," என்று முடிவை அறிவிக்கமுடியுமா என்று சிலர் நினைக்கலாம். "நம்மால் சொல்ல முடி யாது," என்று சிலர் சொல்லலாம். ஆனால், பவுல் என்ன சொல்லுகிறார் தெரியுமா? "நல்ல போராட் டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்," என்று

சொல்லிவிட்டு “என் ஓட்டத்தின் விளைவு, முடிவு, எனக்குத் தெரியாது. அது கர்த்தருடைய கையில் தான் இருக்கிறது. என்ன கிடைக்கும் என்று கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம்,” என்று அவர் சொல்லவில்லை. மாறாக பவுல் பரிசைக் கையில் வாங்கிவிடுகிறார். “இதுமுதல் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது,” என்று உறுதியாகச் சொல்லுகிறார் *(2 தீமோ. 6:18)* “எனக்கு என் பரிசு தெரியும். நான் என் இலக்கை எட்டிவிட்டேன். என் போராட்டங்கள் எல்லாவற்றிலும் நான் உண்மை யாய்ப் போராடினேன்.” பவுலுக்கு சோதனைகள் வந்தன, கண்ணீர் இருந்தது, கவலைகள் இருந்தன, துக்கத்தின் மேல் துக்கம் வந்தது. ஆனால், அவருடைய கடைசி கூக்குரல், “ஓட்டத்தை முடித்தேன்.” பரலோகங்களும் திரளான சாட்சிகளும் அவன் சொன்னதை ஆமோதித்திருப்பார்கள். “ஆமென், அல்லேலூயா” என்று ஆரவாரம் செய்திருப்பார்கள். பவுலுக்குமுன்பாக ஓடின தேவனுடைய மக்க ளெல்லாம், தேவனுடைய தீர்க்கதரிசிகளெல்லாம் அதை ஆமோதித்திருப்பார்கள். “பவுல், நீ உன் ஓட்டத்தை உண்மையாகவே முடித்தாய், நீ நன்றாக ஓடினாய்,” என்று ஆர்ப்பரித்திருப்பார்கள்.

தேவன் தம் சித்தத்தை தம் மக்களின் வாழ்க்கையில் எப்படியாவது நிறைவேற்றிவிடுவார் என்று நினைக்கிறோம். எனவேதான் நம் ஜெபங்கள் ஏனோதானோவென்று இருக்கின்றன அல்லது “நான் ஜெபித்தால் பெரிதாக என்ன நடந்துவிடப் போகிறது?” அல்லது “நான் ஜெபிக்காவிட்டால் அவர்கள் பெரிதாக என்ன இழந்துவிடப் போகிறார்கள்?” என்று நாம் நினைக்கிறோம்.

ஒரு பெரிய படையில் நூறு போர்வீரர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவன், “நான் போர்புரிவதால் நாடு வெற்றிபெற்றுவிடப் போகிறதா?” அல்லது “நான் ஒருவன் போர்புரியாவிட்டால் நாடு தோற்று விடப்போகிறதா?” என்று நினைத்தால் அந்தப் படையின் கதி என்னவாகும்? தான் ஒருவன் மட்டும் தான் இப்படி நினைப்பதாக அவன் நினைக்கிறான். ஆயிரம்பேரும் அப்படித்தான் நினைப்பார்கள். “நான் ஒருவன் சண்டை போடுவதால் பெரிய வெற்றி வந்துவிடப் போவதில்லை. நான் ஒருவன் சண்டை போடாததால் நாடு தோற்றுவிடப் போவதில்லை,” என்று எல்லாரும் நினைக்கிறார்கள். நாம் சண்டை போடும்போது, “உண்மையிலேயே சண்டை போடத்தக்க ஒருவன் நான்தான்,” என்று அர்ப் பணிப்போடு நாம் ஜெபிக்க வேண்டும். இப்படிப் போரிட்டால் தேவனுடைய மக்களுடைய வாழ்க்கை யிலே மாற்றங்கள் வரும். குறிப்பாக போராட்டத்திலே கடந்துபோகின்ற தேவனுடைய மக்களுக்காக நாம் அதிகமாக ஜெபிக்க வேண்டும். எல்லாரும் போராட்டத்தின் வழியாகத்தான் போவார்கள். போராட்டத்தின் தீவிரம் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். நம் ஒரு வாக்கியம், “ஆண்ட வரே, சகோதரனுக்கு நீர் இதைச் செய்யும். இப்படி நீர் உணர்த்தும். இப்படிப்பட்ட ஒரு வெளிச்சத் தைத் தாரும்,” என்று நாம் ஜெபிக்கின்ற ஜெபங்களெல்லாம் காற்றிலே பேசுகின்ற வெற்று வார்த்தைகள் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். “இந்த வார்த்தைகளைச் சொல்வதால் கிழக்கிலே உதிக்கிற சூரியன் மேற்கிலே உதிக்கப் போவதில்லை. எனவே, நான் இந்த வார்த்தைகளைச் சொல்லாவிட்டாலும் சூரியன் உதிக்கிற திசை மாறப்போவதில்லை,” என்று நினைத்து ஜெபிக்காமல் இருந்துவிடுகிறோம்.

இருதயத்தை திருப்பி, நம் முழங்கால்களை முடக்கி, நமக்காக, தேவனுடைய மக்களுக்காக, மற்ற வர்களுக்காக நாம் ஜெபிக்கின்ற காரியங்கள், சொல்கிற வாக்கியங்கள் தேவனை அவர்களுடைய வாழ்க்கைக்குள் கொண்டுபோகும். அவர்களுடைய ஆவிக்குள் கொண்டுபோகும். அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்குள் அது தேவனைக் கொண்டுவரும். தேவனுடைய வளங்களைக் கொண்டு வரும். அவர்கள் தங்கள் போராட்டங்களில் வெற்றிபெறுவார்கள்.

அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும், சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்” *(எபே. 6:18)* என்று சொல்லுகிறார். தேவனுடைய மக்கள் ஒரு சூழ்நிலை வழியாகப் போகும்போது, ஒரு போராட்டத்தின் வழியாகப் போகும்போது விழிப்பாயிருங்கள். அவர்களுக்குத் தேவனுடைய வளங் களும், போராயுதங்களும் தேவைப்படுகின்றன. இந்தப் பூமிக்குரிய எதைக் கொடுத்தும் அவர்கள் வெற்றி பெற முடியாது. நாம் ஜெபித்துவிட்டு அதன்பின் இந்தப் பூமிக்குரிய ஆதரவைக் கொடுத் தால் அவர்கள் அந்தப் போராட்டங்களில் வெற்றி பெறுவார்கள். போராட்டங்களில் வெற்றி என்றால் வியாதியாயிருக்கிறவர்கள் “எனக்கு வியாதி நீங்கி விட்டது. எனக்கு எந்தப் பிரச்சினையும் வர வில்லை” என்பதல்ல. அப்படி ஆச்சரியமான விதத்தில் சாட்சி கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. “முள் இருக்கிறது, ஆனாலும் நான் தேவனுடைய கிருபையினால் இருக்கிறேன். முள் என்னைவிட்டு எடுபடவில்லை. ஆனால், அந்த முள்ளைவிட தேவனுடைய கிருபை எனக்குப் பெரிதா யிருக்கிறது.” இதுதான் நம் சாட்சியாக இருக்க வேண்டும்.

முதலாவது, நம் இலக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைச் சுதந்தரித்துக்கொள்வது. நாம் சுதந் தரித்துக்கொள்வதற்கென்றே அவர் இருக்கிறார். நாம் சுதந்தரித்துக்கொள்ளாமல் போகிற வாய்ப்பு உண்டு. இரண்டாவது எந்த ஒரு மனிதன் அல்லது ஒரு கூட்டம் தேவனுடைய மக்களும் கிறிஸ்து வைச் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்று ஆசையாய்ப் பின்தொடர்கிறார்களோ அவர்கள் போர்க்களத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் சந்திக்கின்ற மனிதர்கள், நேரிடுகிற நிகழ்ச்சிகள், சுற்றியிருக்கிற சூழ்நிலைகள், அதில் இருக்கிற காலங்கள் அவர்களுக்குப் போர்க் களமாக இருக்கும். மூன்றாவது, நாம் போரிடுகிற தளம் மாம்சத்துக்குரியதல்ல. நாம் போரிடுகிற தளம் ஆவிக்குரியது. நான்காவது, நம் போராயுதங்களும் மாம்சத்துக்குரியதல்ல. ஆவிக்குரியது. "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிற தற்கத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத் தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்," *(2 கொரி. 10:4, 5)* என்று பவுல் கூறுகிறார்.

"இந்த அரணிலிருந்து இந்த ஆளை விடுவிக்கவே முடியாது," என்று நாம் நினைக்கும்போது இந்த அரண்களை நிர்மூலமாக்குவதற்குரிய தேவபலம் பூமிக்குரியதல்ல. ஜெபிப்பது வெறும் வெற்று வார்த்தைகள் அல்ல. அவர் பொய்யான கல்லோ, மரமோ அல்ல. முழங்கால்களை முடக்கி, தேவனை நோக்கி ஒரு மனிதன் பேசுகின்ற வார்த்தைகள், விண்ணப்பிக்கின்ற விண்ணப்பங்கள், வேண்டுகிற வேண்டுதல்கள், முறையிடுதல்கள் தேவபலமுள்ளவை. நம் ஜெபங்களுக்கு அந்த அரண்களை நிர்மூலமாக்குகிற தேவபலம் உண்டு. எனவே, நாம் தேவனுடைய மக்களுக்காக அதிக மாக ஜெபிக்க வேண்டும். இதை நம் அனுபவமாக மாற்ற தேவன் நமக்கு உதவி செய்வாராக. ஆமென்.